# மனது

இது சரி என்று சொல்
இல்லை, தவறு என்று சாதிக்கும்;
சரி விடு,
தவறுதான் என்று சொல்
ஏன் சரிதானே என்று வாதிக்கும்;
இந்த மனது ஒரு வில்லங்கம்;

தோல்வியில் துவண்டு போனால்
'தளராதே, நிமிர்ந்து நில்'
என்று சொல்லும்;
வெற்றியில் மிதந்து போனால்
'பறக்காதே, பணிந்து நில்'
என்று காதைக் கடிக்கும்;
இந்த மனது ஒரு விவேகம்;

இந்த மனதோடு
ஒட்டிப் போனால் மழக்கணம்
உதறிப் போனால் தல்க்கணம் . . .

அ. ஜோ
பெங்களூர்
5 பிப்ரவரி 2014.